**முதன்மை சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.**

O.S.No.177/2016 பெயர் : சுந்ரேஸ்வரன் நாள் : 31.07.2026

பி.வா.சா.1 ஆஜர். சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.

**பி.வா.சா.1: வாதி தரப்பில் குறுக்கு விசாரணை:-**

பி.வா.சா.ஆ.5 ஆவணம் 13.03.2009-ம் தேதியில் கிரையம் வாங்கினேன். சொத்து கிரையம் பெறுவதற்கு முன்பு அந்தப் பகுதி எப்படி இருந்தது என்று தெரியுமா என்றால், தெரியாது. விவசாய நிலமாக இருந்து, வீட்டுமனை அங்கீகாரம் பெறாமல், மனையாக பிரித்து விற்றுவிட்டார்கள் என்றால், சரிதான். கிரையச்சொத்தில் காண்பிக்கப் பட்டுள்ள ரோடு முனிசிபாலிட்டிக்கு எழுதிக்கொடுக்கப்படவில்லை என்றால், சரிதான். நான் வாங்கிய சொத்து குறித்த வரைபடம் கிரையப்பத்திரத்தில் உள்ளதா என்றால், உள்ளது. என்னுடையது வடக்கு பார்த்த மனை ஆகும். அதற்கு முன்னர் 20 அடி ரோடும், பின்பகுதியில் 30 அடி ரோடு உள்ளதாக வரைபடத்தில் காண்பிக்கப்பட்டுள்ளது என்றால், சரிதான். இதுபோன்று மேற்கு அப்பாச்சி நகரில் எத்தனை சாலைகள் உள்ளது என்றால், நான் கிரையம் பெற்ற மேற்கு அப்பாச்சி நகரில் 3 கிழமேல் ரோடுகள் உள்ளது, அதில் வடக்கு கடைசியாக எங்கள் பகுதியில் 20 அடி ரோடும், அதற்கு தென்புறம் 30 அடி ரோடும், அதற்கு தென்புறம் 20 அடி ரோடும் உள்ளது. பி.வா.சா.ஆ.6,7 வரைபடத்தில் மேற்கு அப்பாச்சி நகரில் அமைந்துள்ள வீட்டு மனைகளை குறிப்பிட்டு காண்பிக்கப் பட்டுள்ளது என்றால், சரிதான். கிழமேலாக 4 சாலைகள் காண்பிக்கப்பட்டுள்ளது. அந்த 4 ரோடுகளும் கிழபுறத்தில், தென்வடலாக ஒரு ரோட்டில் சேர்வதாக காண்பிக்கப்பட்டுள்ளது என்றால், சரிதான். அதற்கு மேபுறம் காலிமனைகள் என காண்பிக்கப்பட்டுள்ளது என்றால், சரிதான். தற்போது அவை வீடுகளாக மாறிவிட்டதா என்றால், இல்லை, முட்புதராக தான்

உள்ளது. நான் குடியிருக்கும் தெருவில் இரண்டு புறமும் மொத்தம் 16 வீடுகள் உள்ளது. என்னுடைய கிரையப்பத்திரத்தில் (பி.வா.சா.ஆ.5) வழக்கு சொத்து வழியாக தடப் பாத்தியம் இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால், சரியல்ல. வழக்கு சொத்து என்ன சர்வே எண்ணில் உள்ளது என்று எனக்கு தெரியாது. வழக்கு சொத்தில் ரோடு உள்ளது என்பதற்கு நான் எந்த ஆவணமும் பார்க்கவில்லை என்றால், சரியல்ல, பார்த்திருக்கிறேன். என்ன ஆவணத்தை பார்த்தீர்கள் என்றால், 1991-ல் முனிசிபாலிட்டிக்கு E.சீனிவாசன் என்பவர் தான கிரையம் செய்துள்ளார், அதை பார்த்தேன். 4-ம் பிரதிவாதி சங்கத்தில் நானும் உறுப்பினர். வழக்கு தாக்கல் செய்த பின்னிட்டு, தேடி எடுக்கப்பட்ட ஆவணம் தான், 1991-ல் ஏற்படுத்தப்பட்ட கிரையம் ஆவணம் என்றால், சரியல்ல, அதற்கு முன்பே மேற்படி ஆவணத்தை நகல் வாங்கி, வழக்கறிஞர் கருத்துக்கேட்டு வாங்கினேன். மேற்படி நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால், முடியாது. பி.வா.சா.ஆ.6, 7 வரைபடத்தை பார்த்தாலே அதன் உண்மை புலப்படும் என்றாலும், எங்களுக்கு போக்குவரத்திற்கு தென்வடலாக தான் சாலை இருப்பதாக காண்பிக்கப்பட்டுள்ளது என்றாலும், சரியல்ல, கிழமேல் செல்லும் பாதையில் தான் ரோடு உள்ளது. வீடு இருக்கும் 20 அடி ரோடு நேர்கிழக்காக சென்று, தாவா சொத்தை அடைகிறது. வரைபடத்தில் என்னுடைய வீடு 20 அடி ரோடு தென்வடலாக சென்று முடிவதாக காண்பிக்கப்பட்டுள்ளது என்றால், சரிதான். அதன் தொடர்ச்சியாக ரோடு செல்வதாக வரைபடத்தில் காண்பிக்கப்பட வில்லை என்றால், சரிதான். வரைபடத்தில் 20 அடி ரோடு, 30 அடி ரோடு காண்பிக்கப்பட்டுள்ளது, அவர்கள் செல்வதற்கு வேறு பாதை உள்ளதா என்றால், உள்ளது. என் இடத்திற்கு தென்வடலாக வாய்க்கால் ரோடு என காண்பிக்கப்பட்டுள்ள பகுதி தான் எனக்கு சாலை வசதி என்றாலும், தாவா சொத்து வழியாக சாலை வசதி இல்லை

என்றாலும், சரியல்ல. நான் எந்த வருடம் வீடு கட்டினேன் என்றால், 2009-ம் வருடம் வங்கியில் கடன் பெற்று வீடு கட்டினேன். நான் வீடு கட்டிய காலத்தில் அந்த பகுதி பெரும்பாலும் காலிமனை என்றால், 10 வீடு பக்கமாக கட்டிவிட்டார்கள். இந்த வழக்கின் விபரம் நான் தெரிந்துக்கொண்டேனா என்றால், தெரிந்துக்கொண்டேன்.

1989-ல் வாதிகள் இடத்தை கிரையம் வாங்கியதாக கூறியுள்ளார்கள். முனிசிபாலிட்டிக்கு கிரையம் கொடுத்த வருடம் 1991 ஆகும். சொத்தை எனக்கு விற்று விட்டு, மீண்டும் அதை முனிசிபாலிட்டிக்கு எழுதி வைத்தது செல்லுமா என்றால், அதைப்பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்தை வாதிகளுக்கு விற்ற பிறகு, விற்ற நபரே முனிசிபாலிட்டிக்கு எழுதிக்கொடுத்தது, வாதிகளை கட்டுப்படுத்தாது என்றாலும், தானசெட்டில்மெண்ட் பத்திரம் செல்லாது என்றால், தெரியாது. அவர்கள் எழுதிக் கொடுத்த தானசெட்டில்மெண்ட் ஆவணத்தில் Canal and Road என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். என் வீட்டு மனைகள், மற்றும் அருகில் உள்ள வீட்டு மனைகள் LBP பாசனத்திற்கு கட்டுப்பட்டதா என்றால், அதைப்பற்றி எனக்கு தெரியாது. நான் கிரையம் வாங்கிய காலத்திலிருந்து, இந்த பகுதிக்கு LBP பாசன வசதி இருந்ததா என்றால், எனக்கு தெரிந்து பாசனம் செய்யவில்லை. ஈரோடு நகரம், கடந்த 10, 15 ஆண்டுகளில் விரிவடைந்துள்ளதா என்றால், விரிவடைந்துள்ளது. விவசாய நிலங்கள் எல்லாம், குடியிருப்பு பகுதிகளாக மாறியதால், LBP பாசனம் வாய்க்கால்களில் தண்ணீர் விடுவதில் பல பகுதிகளில் நிறுத்தப்பட்டுள்ளது என்றால், எனக்கு தெரியாது. வாய்க்கால்கள் தார்ரோடுகளாக மாற்றப்பட்டுள்ளது என்றால், அதைப்பற்றி எனக்கு தெரியாது. எங்கள் காலனிக்கு தென்புறத்தில், பெரிய குடோன் உள்ளதா என்றால், அதைப்பற்றி எனக்கு தெரியாது. அந்த குடோனிலிருந்து மேலே செல்லும் முழு சாலைகளும் LBP

வாய்க்கால்கள் தான் சாலைகளாக மாற்றப்பட்டுள்ளது என்றால், அதைப்பற்றி எனக்கு தெரியாது. எங்கள் காலனிக்கு கிழபுறத்தில் தென்வடலாக செல்லும் வாய்க்கால் மற்றும் சாலை தான் ஒரே வழி என்றும், அதை தான் என் முன்னோர்கள் பயன்படுத்தி வந்தார்கள் என்றால், சரியல்ல. அந்த தடபாத்தியத்தை காண்பித்துதான், எனக்கு விற்றவர்கள் மனைகளை விற்பனை செய்துள்ளார்கள் என்றால், சரியல்ல. தாவா சொத்தில் மேற்கு அப்பாச்சி நகர் குடிமக்களுக்கு எந்த உரிமையும், எப்போதும் சித்திக்கவில்லை என்றால், சரியல்ல. என்னுடைய பி.வா.சா.ஆ.6, 7 ஆவணத்தில் எனக்கு வேறு தடம் தான் காண்பிக்கப்பட்டுள்ளது என்றால், சரியல்ல. மூல ஆவணங்களை நான் நீதிமன்றத்தில் ஒப்படைத்தால், உண்மை தெரிந்து விடும் என்பதால், ஒப்படைக்கவில்லை என்றால், சரியல்ல.